Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
E-Mail: collegehouse_mdu@yahoo.co.in
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 61 | உள்ளூர் - 02.03.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 61 | வெளியூர் - 03.03.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


இந்த பரிகாரம் செய்தால் உங்கள் வாழ்வில் செல்வம் பெருகும்..!!

சென்னையில் துறைமுக வேலைகள் அறிவிப்பு!

திமுக கூட்டணியில் மதிமுக அதிருப்தி?

பிளஸ்-2 பொதுத்தேர்வு தொடக்கம்!

# மத்திய கிழக்கில் போர் பதற்றம்: பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனை கூட்டம்!

புதுடெல்லி, மார்ச். 02–

அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்து ஈரான்மீது



தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஈரான் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டார்.

இதற்கு பதிலடியாக கத்தார், குவைத், பரைன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவினருடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் உள்துறை மந்திரி அமித்ஷா, பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங், நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, மத்திய கிழக்கில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு பற்றியும், தேவைப்பட்டால் அவர்களை சிறப்பு விமானங்களில் அழைத்து வருவது பற்றியும் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது.

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி!

புதுடெல்லி, மார்ச். 02–

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியவை இணைந்து ஈரான்மீது தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக கத்தார், குவைத், பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றம் நிலவி வருகிறது.



இதனிடையே, பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் ஸயத் அல்நஹ்யானிடம் தொலைபேசி வாயிலாக நேற்று பேசினார்.

அப்போது யுஇஏ மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பிரதமர் மோடி, தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் பேசினார். போர் நடவடிக்கைகளை விரைவில் நிறுத்தவேண்டும் என்று பிரதமர் மோடி அவரிடம் வலியுறுத்தினார்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தற்போதைய பிராந்திய நிலைமை குறித்து விவாதிக்க பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த இந்தியாவின் கவலைகளைத் தெரிவித்ததோடு, பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்குமாறு வலியுறுத்தினேன். போர் நடவடிக்கைகளை விரைவில் நிறுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது" என்று தெரிவித்துள்ளார்.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் குயில் தோட்டம் திட்டப்பகுதியில் நடைபெற்ற விழாவில், குயில் தோட்டம் திட்டப்பகுதியில் 65.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 384 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், வன்னியபுரம் திட்டப்பகுதியில் 36.92 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 216 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி. சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ந. பிரியா ரவிச்சந்திரன், வாரிய தலைமை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக இந்திய பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி: ரூ.9 லட்சம் கோடி இழப்பு!

மும்பை, மார்ச். 02–

இஸ்ரேல் – ஈரான் போர் காரணமாக இந்திய பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நேற்று திடீரென தாக்குதல்களை நடத்த தொடங்கியதை அடுத்து, ஈரான் பதிலுக்கு அமெரிக்காவின் ஏவுதளங்கள் இருக்கும் பகுதிகளில் தாக்குதலை நடத்த தொடங்கியது. இதையடுத்து மத்திய கிழக்கு நாடுகள் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக கச்சா



எண்ணெய், இயற்கை எரிவாயு போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ளதால் அவற்றின் விலை 15% வரை உயர்ந்துள்ளது. போர் தொடர்ந்து நீடித்தால் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 100 டாலர் வரை உயரும் என பர்க்லே ஆய்வு நிறுவனம் தகவல் தெரிவிவித்துள்ளது.

இதனிடையே இஸ்ரேல் – ஈரான் போர் காரணமாக இந்திய பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. மும்பை பங்குச் சந்தை குறியீட்டெண் சென்செக்ஸ் 1210 புள்ளிகள் சரிந்து 80,070 புள்ளிகளில் வர்த்தகம் ஆகி வருகிறது. தேசியப் பங்குச் சந்தை குறியீட்டெண் நிஃப்டி 370 புள்ளிகள் சரிந்து 24,808 புள்ளிகளில் வர்த்தகமாகி வருகிறது. இந்திய பங்குச்சந்தை வீழ்ச்சியால் முதலீட்டாளர்களுக்கு சில மணி நேரத்தில் ரூ.9 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது

### மூன்றாம் உலக போருக்கு விதை?

# ஜனவரியில் வெனிசுலா, பிப்ரவரியில் ஈரான்!

### ஸ்கெட்ச் போட்டு தூக்கும் டிரம்ப்!!

அமெரிக்கா, மார்ச். 02–

2026 ஆம் ஆண்டு அதிரடி ராணுவ நடவடிக்கைகளுக்கான ஆண்டாக மாறியிருக்கிறது. பல்வேறு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு நீடித்து வந்தாலும் பெரிய அளவிலான ராணுவ நடவடிக்கை வரை அவை சென்றது கிடையாது. ஆனால் இந்த ஆண்டு அவை ஒவ்வொன்றாக நடக்கிறது. நீண்ட காலமாக அமெரிக்காவுக்கும் வெனிசுலாவுக்கும் பகை இருந்தது. கம்யூனிச நாடான வெனிசுலா மீது கடுமையான பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்திருந்தது. இந்த சூழலில் கடந்த ஜனவரி மாதம் திடீரென அமெரிக்க ராணுவம் வெனிசுலா மீது ராணுவ நடவடிக்கை எடுத்து அந்நாட்டு அதிபர் நிக்கோ லஸ் மதுரோவை கைது செய்து அமெரிக்காவிற்கு நாடு கடத்தியது. இதனை அடுத்து வெனிசுலாவின் எண்ணெய் வளம் அமெரிக்காவுக்கு சொந்தமானது என அறிவித்த டிரம்ப் அந்நாட்டு கச்சா எண்ணெயை இந்தியா உள்ளிட்ட நாடுகள் வாங்குவதை உறுதிப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை எடுத்தார்.

ஜனவரி மாதம் வெனிசுலா மீது கைவைத்த டிரம்ப் பிப்ரவரி மாத இறுதியில் ஈரான் மீது கை வைத்திருக்கி றார். ஒருபுறம் ஈரானுடன் அணுசக்தி பேச்சுவார்த்தை நடத்தி வந்த அமெரிக்கா மற்றொருபுறம் தன்னுடைய போர்க்கப்பல்களை தொடர்ச்சியாக ஈரான் மற்றும் சுற்றி இருந்த பகுதிகளை நோக்கி நிலை நிறுத்தியது. இந்த சூழலில் தான் சனிக்கிழமை அன்று திடீரென அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தி அந்நாட்டு தலைவர்



அயத்துல்லா அலி கமேனியை கொலை செய்துள்ளன.

ஜனவரியில் வெனிசுலா, பிப்ரவரியில் ஈரான் அப்படி என்றால் மார்ச் மாதத்தில் எந்த நாடு எந்த தலைவர் என சமூக வலைத்தளங்களில் தற்போது விவாதம் அனல் பறக்க தொடங்கியிருக்கிறது. கியூபா , ஈராக் போன்ற நாடுகள் மீது இதே பாணியிலான தாக்குதலை அமெரிக்கா நடத்துவதற்கு வாய்ப்புள்ளதோ என சமூக வலைத்தளவாசிகள் விவா திக்க தொடங்கிவிட்டனர். தங்கள் நாட்டு மத தலைவரை அமெரிக்க அரசாங்கம் கொன்றதை ஈரான் அத்தனை எளிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை தக்க பதிலடி கொடுப்போம் என தெரி விக்கிறது. மற்றொருபுறம் இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல் தொடரும் என அறிவிப்பு வெளியிட்டு இருக்கின்றன. ஈரான் ராணுவம் தொடர்ச்சியாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகள் மீது தாக்குதலை நடத்தி வருகிறது. ஈரான் மீதான தாக்குதலுக்கு ரஷ்யாவும் சீனாவும் கடுமையாக கண்டனம் தெரிவித்து இருக்கின்றன. இந்த நிலையில் தான் இது மூன்றாம் உலக போருக்கு விதையா என்ற கேள்வி எழுந்துள்ளது.

**ஈரான் போர்:**

துபாய், கத்தார், பஹ்ரைனில் வசிக்கும் இந்தியர்கள் என்ன செய்ய வேண்டும்? முன்னதாக தீர்க்கதரிசியான பாபா வாங்கா 2026இல் பெரிய போர் நடக்கும் என கூறியிருந்த கணிபுகள் உண்மையாகிறதோ என சமூக வலைத்தளவாசிகள் பேச தொடங்கி இருக்கின்றனர். பாபா வாங்கா பல்கேரியாவை சேர்ந்த பார்வையற்ற நபர். சிறு வயதில் பார்வை பறி போன போது தான் இவருக்கு எதிர்காலத்தை கணிக்கும் சக்தி வந்ததாக சொல்லப்ப டுகிறது. இந்நிலையில் 2026 மூன்றாம் உலக போர் தொடங்கும் ஆண்டாக இருக்கலாம் என கணித்து ள்ளதால் அது அப்படியே நடக்கிறதா என பலரும் விவாதிக்க தொடங்கியுள்ளனர்.

## வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள தமிழர்களுக்காக தமிழ்நாடு அரசு அவசர உதவி எண்கள் அறிவிப்பு...!

சென்னை, மார்ச். 02–

மத்திய கிழக்கில் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், துபாய், ஷார்ஜா போன்ற முக்கிய விமான நிலையங்கள் மூடப்பட்டதால் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் சிக்கித் தவிக்கின்றனர். இதில் பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து, வங்காள நடிகை சுபாஸ்ரீ கங்குலி உள்ளிட்ட பிரபலங்களும் அடங்குவர். வளைகுடா நாடுகளில் சிக்கி உள்ளவர்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசு அவசர உதவி எண்களை அறிவித்து உள்ளது.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக, ஈரான் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன், சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட வளைகுடாநாடுகளில் பதற்ற மான சூழ்நிலை நிலவுகிறது. அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு கருதி, தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும், இந்திய தூதரகம் வழங்கும் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி வீடுகளிலேயே பாதுகாப்பாக இருக்குமாறும் இந்திய அரசு கேட்டு கொண்டுள்ளது. தமிழக முதல்வர் என்ற முறையில், வளைகுடா நாடுகளில் வசித்து வரும் நம் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த கவலை அடைந்துள்ளேன். அவர்களின் நிலைமையை உடனுக்குடன் கண்காணித்து, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது. இதற்காக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பிரத்யேகக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, நிலைமை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழர்கள் அல்லது தமிழகத்தில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால், தமிழக அரசின் 24 மணி நேர கட்டணமில்லா உதவி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

அதன்படி, இந்தியாவுக்குள் இருப்பவர்கள் 1800 309 3793 என்ற எண்ணையும், வெளிநாடுகளில்




இருப்பவர்கள் +91 80 6900 9900 மற்றும் +91 80 6900 9901 ஆகிய எண்களையும் தொடர்பு கொள்ளலாம். மேலும், டெல்லி கட்டுப்பாட்டு அறையை 011–24193300 மற்றும் 92895 16712 (வாட்ஸ்–அப்) ஆகிய எண்கள் மூலம் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஈரானை தொடர்ந்து லெபனானில் இஸ்ரேல் சரமாரி தாக்குதல்; 31 பேர் பலி!

ஜெருசலேம், மார்ச். 02–

ஈரானை தொடர்ந்து லெபனானில் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளை குறி வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், பெய்ரூட்டில் 31 பேர் கொல்லப்பட்டனர்.

மேற்கு ஆசிய நாடான ஈரான் மீது அந்த பிராந்தியத்தில் உள்ள இஸ்ரேல், அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்து தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் ஆட்சியாளர் அயதுல்லா கமேனி, பாதுகாப்பு துறை அமைச்சர் உட்பட பல தலைவர்கள் உயிரிழந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து லெபனானில் இருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பினர்



இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடியாக லெபனான் மீது இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து வருகிறது. லெபனான் நாட்டின் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகளில், இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் சரமாரியாக தாக்குதல் நடத்தி இருக்கின்றனர். இந்த தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டனர்.


தலையங்கம் மதுரை மணி

திங்கட்கிழமை 02.03.2026

விசுவாவசு தமிழ் வருடம்

மாசி மாதம் 18-ம் தேதி

# அமெரிக்காவில் புது டிரெண்ட்..! தெய்வீகமாக இருக்கு பாஸ்..!



அமெரிக்காவின் சிலிக்கான் வேலியாக இருக்கும் சான் ஃபிரான்சிஸ்கோவை தலைமையிடமாகக் கொண்ட AI கோடிங் ஸ்டார்ட்அப் நிறுவனமான கர்சர் (Cursor) அலுவலகத்தின் புதிய கொள்கை தற்போது இணையத்தில் பெரும் வைரலாகி வருகிறது. பொதுவாக அமெரிக்காவில் ஷூ, செருப்புகளை வீட்டில் அணிவது இயல்பு, ஆனால் Cursor போன்ற பல நிறுவனங்கள் தற்போது அலுவலகத்தில் ஷூ, செருப்பு இல்லாமல் பணியாற்றுவது முக்கிய கொள்கையாக கொண்டுள்ளனர். குறிப்பாக இளம் தலைமுறையினர் அதிகம் இருக்கும் நிறுவனங்களில் இது ஆர்வமாக பின்பற்றப்படுகிறது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த டெவலப்பர் ஆண்ட்ரே லான்ட்கிராஃப் (Andre Landgraf) தனது X கணக்கில் ஒரு புகைப்படத்தை பகிர்ந்துள்ளார். அந்த புகைப்படத்தில் அலுவலகத்திற்கு முன் பலரின் காலணிகள் கழற்றி வைக்கப்பட்டு உள்ளது. இந்த புகைப்படத்திற்கு கேப்ஷனாக "சான் ஃபிரான்சிஸ்கோவில் இருப்பவர்களுக்கு இது எந்த ஆபீஸ் என்று கட்டாயம் தெரியும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதைப் பார்த்த பிற டெக் ஊழியர்கள் உடனடியாக "கர்சர் ஆபீஸ்", "கண்டிப்பாக கர்சர்தான்", "CURSOR" என்று கமெண்ட் செய்து அடையாளம் காட்டியுள்ளனர். கர்சர் நிறுவனம் 2022இல் மைக்கேல் ட்ரூல், அமன் சாங்கர், சுவாலே அசிஃப், ஆர்விந்த் லூன்மார்க் ஆகியோரால் தொடங்கப்பட்டது.

இந்நிறுவனம் AI உதவியுடன் கோடிங் செய்யும் ஸ்மார்ட் கோட் எடிட்டரை உருவாக்கியது. சாப்ட்வேர் டெவலப்பர்கள் கோட் எழுதுவது, திருத்துவது, புரிந்துகொள்வது ஆகியவற்றை வேகமாகச் செய்ய உதவுகிறது இந்த கர்சர் டூல். நவம்பர் 2025இல் 2.3 பில்லியன் டாலர் நிதியை திரட்டிய இந்நிறுவனம் 29.3 பில்லியன் டாலர் மதிப்பீட்டுடன் வளர்ந்து வருகிறது. இந்நிறுவனத்தின் தனித்துவமான கொள்கை என்னவென்றால், அலுவலகத்தில் காலணி அணியக்கூடாது. ஊழியர்கள் அனைவரும் காலணிகளை கழற்றி வைத்துவிட்டு உள்ளே செல்கின்றனர். இது சான் ஃபிரான்சிஸ்கோவில் உள்ள பல டெக் ஸ்டார்ட்அப்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. கர்சர் ஊழியர் பென் லாங் சில மாதங்களுக்கு முன்பு இதே போன்ற புகைப்படத்தை பகிர்ந்தபோது, 25க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப்கள் இதே கொள்கையை பின்பற்றுவதாக பட்டியல் வெளியிட்டார். இந்த கொள்கை அலுவலகத்தை சுத்தமாக வைத்திருக்கவும், ஊழியர்களுக்கு வசதியாகவும் இருக்கும் என நிறுவனங்கள் கூறுகின்றன. ஆண்ட்ரே லான்ட்கிராஃப் X பதிவில் சிலர் தெய்வீக அனுபவம் என்ற கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர். மற்றவர்கள் இது போன்ற கொள்கைகளை விமர்சித்தும் பதிவிட்டுள்ளனர். இந்த புகைப்படம் டெக் உலகின் வித்தியாசமான ஆபீஸ் கலாச்சாரத்தை விவாதத்துக்கு கொண்டு வந்துள்ளது.

# எடப்பாடியார் டெல்லி அவசர பயணம்!



சென்னை, மார்ச். 02–

மதுரையில் நேற்று தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கூட்டணி கட்சி தலைவர்கள் பலர் பங்கேற்றனர். கூட்டம் முடிந்த பின்னர் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய மந்திரியும், தமிழக தேர்தல் பா.ஜ.க. மேலிட பொறுப்பாளருமான பியூஷ் கோயல், மத்திய இணை மந்திரி எல்.முருகன், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் ஒரு தனியார் ஓட்டலில் சந்தித்து பேசினர்.

அப்போது அவர்கள் கூட்டணி தொகுதி பங்கீடு தொடர்பாக பேசியதாக கூறப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தையின்போது பா.ஜ.க. போட்டியிட விரும்பும் தொகுதிகளின் பட்டியலை வழங்கியதாக தெரிகிறது. அதில் தென்மாவட்டம் மற்றும் மேற்கு மாவட்டங்களில் அதிக தொகுதிகள் இடம் பிடித்துள்ளதாகவும், அதில் பல அ.தி.மு.க. வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் என்றும் கூறப்படுகிறது.

மேலும், திருப்பரங்குன்றம் உள்ளிட்ட சில தொகுதிகளை தங்களுக்கு ஒதுக்க பா.ஜ.க. சார்பில் கேட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் இன்று எடப்பாடி பழனிசாமி டெல்லி செல்கிறார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவர் சந்திக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. அங்கு பா.ஜ.க. தலைமையிடம் தொகுதி பங்கீடு தொடர்பாக அவர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

# ஈரான் பள்ளி மீது தாக்குதல்: பலி எண்ணிக்கை 165 ஆக உயர்வு!



டெஹ்ரான், மார்ச். 02–

பயங்கரவாதிகளிடம் அணு ஆயுதங்கள் இருக்கக்கூடாது எனக்கூறி அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவை இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. மினாப் நகரில் ஈரானின் புரட்சிகர காவல் படையின் தளம் அமைந்துள்ளது. ஈரான் தலைநகர் தெஹ்ரானின் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகியவை இணைந்து வான்வழித் தாக்குதல்களை நடத்தின. ஈரானின் ஹோர்மோ ஸ்கான் மாகாணத்தில் உள்ள மினாப் நகரில் பெண்கள் தொடக்கப்பள்ளி மீது இஸ்ரேல் – அமெரிக்கா நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 85 மாணவிகள் பலியானதாக அறிவிக்கப்பட்டது. மேலும் பலர் காயமடைந்தனர். இத்தகவலை அந்நாட்டு அரசு நடத்தும் செய்தி நிறுவனம் உறுதிசெய்தது. பள்ளி மீதான தாக்குதல் காட்டுமிராண்டித்தனமான செயல் என ஈரான் அதிபர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தக் கொடூர தாக்குதலில் பலியான மாணவிகளின் எண்ணிக்கை 165 ஆக உயர்ந்துள்ளது. இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணி நடந்து வருவதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

# கச்சத்தீவு புனிதப்பயணத்துக்கு இந்திய கடலோர காவல் படை முழு பாதுகாப்பு!



சென்னை, மார்ச். 02–

கச்சத்தீவில் உள்ள புகழ்பெற்ற புனித அந்தோணியார் தேவாலயத்தில் பிப்ரவரி 27 முதல் 28 வரை வருடாந்திர 2 நாள் விழா நடைபெற்றது. இந்த திருவிழா இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களால் பெரிதும் மதிக்கப்படுவதாகும்.

இத்திருவிழாவில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களை சேர்ந்த மொத்தம் 3,741 புனிதப்பயணிகள் பிப்ரவரி 27 அன்று கச்சத்தீவுக்கு புறப்பட்டனர். ஏராளமான இயந்திரமயமாக்கப்பட்ட மற்றும் பிற படகுகள் ராமேஸ்வரத்தில் இருந்து சர்வதேச கடல் எல்லை கோடு IMBL வரை இந்திய கடலோர காவல்படையினரால் அழைத்து செல்லப்பட்டு, பின்னர் அவர்கள் தங்களது பயணத்துக்காக இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர். கச்சத்தீவில் இரவு தங்கி விழாவில் பங்கேற்ற பிறகு, அவர்கள் பாதுகாப்பாக தாய்நாட்டிற்கு திரும்பினர். மீன்பிடி படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இந்திய கடலோர காவல்படையின் கடல் மற்றும் வான் பிரிவுகளின் விழிப்பான பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளும் செயல்பட்டன.

# மார்ச் 4-ம் தேதி அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்!


சென்னை, மார்ச். 02–

அதிமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்நாடு முன்னாள் முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக எம்.ஜி.ஆர். மாளிகையில், 4.3.2026 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.



இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஞாயிற்றுக்கிழமை இந்த பரிகாரம் செய்தால் உங்கள் வாழ்விலும் செல்வம் பெருகும்..!!






தமிழ் கலாச்சாரத்திலும் ஆன்மீகத்திலும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட கிரகத்திற்கும், தேவதைக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், ஞாயிற்றுக்கிழமை என்பது நவக்கிரகங்களின் நாயகனான சூரிய பகவானுக்கு உரிய நாளாக கருதப்படுகிறது. ஜாதகத்தில் சூரியன் பலமாக இருந்தால் அரச யோகம், புகழ் மற்றும் ஆரோக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. சூரிய பகவானின் அருளைப் பெற்று, வாழ்வில் முடங்கிக் கிடக்கும் அதிர்ஷ்டத்தை தட்டி எழுப்ப ஞாயிற்றுக்கிழமைகளில் செய்ய வேண்டிய சில எளிய பரிகாரங்களை இந்தப் பதிவில் பார்க்கலாம்.

**அதிர்ஷ்டம் தரும் பால் மற்றும் அரச மர வழிபாடு :**

வாழ்வில் வறுமை நீங்கி செல்வச் செழிப்பு ஏற்பட, ஞாயிற்றுக்கிழமை இரவு உறங்கும் போது ஒரு சிறிய பாத்திரத்தில் பால் எடுத்து தலைமாட்டிற்கு அருகில் வைத்துக்கொள்ள வேண்டும். மறுநாள் திங்கட்கிழமை அதிகாலையில் எழுந்து, அந்தப் பாலை சீமைக்கருவேல மரத்தின் வேரில் ஊற்ற வேண்டும். இது எதிர்மறை ஆற்றல்களை நீக்கி சுபிட்சத்தை வழங்கும். அதேபோல், ஞாயிற்றுக்கிழமை மாலை நேரத்தில் அரச மரத்தின் அடியில் மாவு மாவினால் செய்த நான்கு முக விளக்கை ஏற்றி, அதில் கடுகு எண்ணெய் ஊற்றி தீபமிடுவது பெரும் புகழையும், மகிழ்ச்சியையும் தேடித்தரும்.

**ஆலமர இலை மற்றும் சூரிய அர்க்கியம் :**

மனதில் நீண்ட நாட்களாக இருக்கும் கோரிக்கைகள் நிறைவேற, ஞாயிற்றுக்கிழமை ஆலமரத்தின் இலை ஒன்றில் உங்கள் விருப்பத்தை எழுதி, அதனை ஓடும் நீர்நிலைகளில் விடலாம். இது உங்கள் ஆசைகள் நிறைவேற வழிவகுக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, ஞாயிறு அதிகாலையில் குளித்து முடித்துவிட்டு, செம்பு பாத்திரத்தில் நீர் எடுத்து அதில் குங்குமம் (ரோலி), மலர்கள், சர்க்கரை மிட்டாய் மற்றும் அட்சதை சேர்த்து உதய சூரியனுக்கு 'அர்க்கியம்' செய்வது (நீர் வார்த்து வணங்குவது) சூரியனின் நேரடி அருளைப் பெற்றுத்தரும்.

**துடைப்பம் தானம் தரும் யோகம் :**

ஜோதிட சாஸ்திரத்தின்படி, ஞாயிற்றுக்கிழமை அன்று துடைப்பம் வாங்குவது மிகவும் மங்களகரமானதாக கருதப்படுகிறது. அன்று 3 புதிய துடைப்பங்களை வாங்கி வீட்டிற்கு வந்து, அடுத்த நாள் திங்கட்கிழமை காலையில் அதனை அருகில் உள்ள ஏதேனும் ஒரு கோவிலுக்கு தானமாக வழங்க வேண்டும். இந்த எளிய செயல் உங்கள் வாழ்வில் மூடிக்கிடக்கும் அதிர்ஷ்டக் கதவுகளைத் திறக்கும் ஆற்றல் கொண்டது என நம்பப்படுகிறது. சூரிய பகவானை முறையாக வழிபடும்போது, ஒருவரது வாழ்வில் இருள் நீங்கி ஒளி பிறக்கும் என்பது திண்ணம்.

# தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பிளஸ்-2 பொதுத்தேர்வு தொடக்கம்!



சென்னை, மார்ச். 02–

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பிளஸ்–2 பொதுத்தேர்வு இன்று தொடங்கியது. இந்த தேர்வினை 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 பேர் எழுதுகின்றனர். பள்ளி மாணவ–மாணவிகள் 7 லட்சத்து 99 ஆயிரத்து 692 பேரும் தனித்தேர்வர்கள் 27,783 பேரும் எழுதினர். 7545 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ–மாணவிகள் 3412 தேர்வு மையங்களில் இத்தேர்வினை எழுதினர். இன்று தொடங்கிய பொதுத்தேர்வு 26–ந்தேதி வரை நடைபெறுகிறது. பிளஸ்–2 பொதுத்தேர்வினை 4540 பறக்கும் படையினர் கண்காணித்தனர். 44 ஆயிரத்து 624 பேர் தேர்வு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

தேர்வு மையத்தில் ஒழுங்கீனங்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்வுத்துறை எச்சரித்துள்ளது. ஆள் மாறாட்டம், விடைத்தாள் மாற்றுதல், காப்பி அடித்தல் போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டால் தேர்வு எழுதுவதற்கு 3 ஆண்டு காலம் தடை விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. அதேபோல் தேர்வு குறித்த சந்தேகங்கள் மற்றும் புகார்களைத் தெரிவிக்க 14417 மற்றும் 94983 83075, 94983 83076 எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நரேந்திர மோடி ஜேவர் இந்தியா சிப் பைவேட் லிமிடெட் OSAT திட்டத்திற்கான அடிக்கல் நாட்டினார்!

சென்னை , மார்ச். 02–

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, YEIDA, ஜேவர், கிரேட்டர் நொய்டாவில் எச்.சி.எல் குழுமம் மற்றும் ஃபாக்ஸ்கான் இணைந்து தொடங்கும் இந்தியா சிபிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்வு இந்திய செமிகொண்டக்டர் மிஷன் திட்டத்தின் முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. பிரதமர் இணைய வழியாக கலந்து கொண்டார்; உத்தரப்பிரதேச முதல்வர் Yogi Adityanath மற்றும் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேரில் பங்கேற்றனர். HCL குழுமம் மற்றும் ஃபாக்ஸ்கான் ஆகியவற்றின் 60:40 கூட்டு முயற்சியாக இந்த நிறுவனம், ₹3,700 கோடி முதலீட்டில் மேம்பட்ட அவுட்சோர்ஸ் செய்யப்பட்டது மிதமின் கடத்தி அசெம்பிளி மற்றும் சோதனை (OSAT) உற்பத்தி நிலையத்தை அமைக்க உள்ளது. 2028 ஆம் ஆண்டுக்குள் செயல்படத் தொடங்கவுள்ள இந்த ஆலை, மாதத்திற்கு 20,000 வேஃபர்கள் செயலாக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மேலும் 3,500க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இந்தியாவின் உள்நாட்டு செமிகொண்டக்டர் வழங்கல் சங்கிலியை வலுப்படுத்தும்.

HCL குழுமத் தலைவர் ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா, இந்தத் திட்டம் நிறுவனத்தின் வளர்ச்சி பயணத்தில் புதிய அத்தியாயமாக இருப்பதாகவும், இந்தியாவின் தொழில்நுட்ப மற்றும் உற்பத்தித் துறையில் உங்கள்mad நீண்டகால அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாகவும் தெரிவித்தார். மத்திய மற்றும் மாநில அரசுகளின் உறுதியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

Foxconn தலைவர் யங் லியூ, இந்த கூட்டு முயற்சி இந்தியாவில் நிறுவனத்தின் "Build–Operate–Localize" மாதிரியின் சிறந்த எடுத்துக்காட்டு எனக் கூறினார். இந்த ஒத்துழைப்பு இந்தியாவின் செமிகொண்டக்டர் உற்பத்தித் துறையில் தரநிலைகள் மற்றும் செயல்திறனில் புதிய அளவுகோல்களை உருவாக்கும் என அவர் தெரிவித்தார்.

# சினிமா துளிகள்..!

## ரஜினி – கமலாக மாறிய மோடி – அமித் ஷா !




45 ஆண்டுகளுக்குப் பிறகு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் உலகநாயகன் கமல்ஹாசன் இணைந்து நடிக்கும் மெகா பட்ஜெட் திரைப்படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குகிறார். அனிருத் இப்படத்திற்கு இசையமைக்கிறார். இப்படத்திற்கு தற்காலிகமாக KHxRK என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

ரெட் ஜெயண்ட் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் ப்ரோமோ வீடியோ அண்மையில் வெளியாகி வரவேற்பை பெற்றது. ப்ரோமோ வீடியோவில் தீம் மியூசிக் ரெடியா இருக்கு என்று அனிருத் சொல்ல, யாரு ஹீரோ? என்று கமல்ஹாசன் கேட்க, கேட்குறாங்களா சொல்லுங்க ஜீ என்று ரஜினிகாந்த் சொல்ல இயக்குனர் நெல்சனும், அனிருத்தும் செய்வதறியாது திகைக்கின்றனர். இது தொடர்பான ப்ரோமோ வீடியோ ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், இந்த ப்ரோமோ வீடியோவை எடிட் செய்து மோடி – அமித் ஷா முகத்தை வைத்து தமிழக பாஜக வெளியிட்டுள்ளது. அந்த பதிவில், "பாரதத்தை வல்லரசாக்க அயராது உழைக்கும் இணையற்ற இரட்டையர்கள்..!" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரையில் மகா ஸ்ரீ சற்குரு பகவான் பழனிசுவாமிகள் 12 ஆம் ஆண்டு குருபூஜை!

மதுரை, மார்ச். 02–

பழனி அருகே கணக்கம்பட்டியில் வாழ்ந்த மகா ஸ்ரீ சற்குரு பகவான் பழனி சுவாமிகள் மதுரை வில்லாபுரம் பகுதியில் முதன் முதலாக மதுரை ஞானசபை என்ற அமைப்பை நிறுவினார். இங்கு தினசரி வருகை தந்து அருள் பாலித்தோடு தனது அருள் நிறைந்த இடமாக மதுரை ஞானசபையை மாற்றி அமைத்தார். இங்கு தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து அருளாசி பெற்றனர். தமது வாழ்நாளில் பெரும்பகுதியை மதுரை ஞானசபையில் பக்தர்களோடு செலவழித்தார். பகவான் பழனி சுவாமிகளின் பெருமைமிகு போற்றுதலுக்குரிய இடமாக மதுரை சபை விளங்குகிறது. இங்கு பகவான் பழனிசுவாமிகளை நினைத்து வரும் பக்தர்களின் குறைகளைப் போக்கும் இடமாக உள்ளதாலும் , அறிவுக்கல்வி போதிக்கக்கூடிய ஞான சபையாக இருப்பதாலும் தினசரி திரளான பக்தர்கள் தரிசனம் செய்து, விளக்கேற்றி மனமுருகி வழிபட்டு செல்கின்றனர். இங்கு மகா ஸ்ரீ சற்குரு பகவான் பழனிசுவாமிகளின் 12 ஆம் ஆண்டு குருபூஜை விழா 27–02–26ல் துவங்கி 01–03–26ஆம்தேதி வரை மூன்று நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. பகவானின் அருளாசிகளோடு மதுரை ஞானசபையில் முதல் நாள் நிகழ்ச்சியாக இன்று காலை யாகசாலை பூஜையுடன் குருபூஜை துவங்கியது. முன்னதாக 12–ஆம் ஆண்டு குருபூஜை என்பதால் மகா ஸ்ரீ சற்குரு பகவானுக்கு விபூதி, நெய், சந்தனம், மஞ்சள் பொடி,பால், பன்னீர்,திரவியம் உள்ளிட்ட 12 அபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலையில் பக்தர்கள் சரண கோஷம் முழங்க மகா ஸ்ரீ சற்குரு பகவான் சிறப்பு அலங்கா ரத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளினார். பூப்பல்லக்கு தெற்கு வாசல், டிபிகே ரோடு, ஜெய்ஹிந்த்புரம், சோலை அழகு புரம் வழியாக வில்லாபுரம் ஞானசபையை வந்தடைந்தது. இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பகவானை தரிசனம் செய்து மகிழ்ந்தனர். பிப்ரவரி 28ஆம் தேதி, இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக காலையில் குருபூஜை சிறப்பு அபிஷேகம் தீபாராதனை நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து மாலையில் கொங்கு மண்டலம் பவளக்கொடி கும்மி கலைக்குழு சார்பில் வள்ளி கும்மி நடனம் நடைபெறுகின்றது. 01–03–2026 மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக காலையில் சற்குரு மகா ஸ்ரீ பகவானுக்கு புண்ணிய தீர்த்தங்களால் சங்காபிஷேகம் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற உள்ளது. இந்த பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்கள் அனைவரும்பகவானின் திருவடிகளுக்கு நேரடியாக பூஜை செய்ய அனுமதிக்கப்பட இருக்கிறார்கள். குருபூஜை விழா நடைபெறும் மூன்று நாட்களும் தொடர் அன்னதானம் நடைபெற இருக்கின்றது. தங்களைத் தேடி வந்து அன்பு காட்டி, தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றி அருள் புரியும் பகவானுக்கு நன்றி சொல்லும் திருவிழாவாக ஒவ்வொரு ஆண்டும் மதுரை ஞானசபையில் குருபூஜை விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு பகவானின் 12–ஆம் ஆண்டு குருபூஜை என்பது வெகு சிறப்பு வாய்ந்தது. பக்த கோடிகள் திரளாகக் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்று மகிழலாம்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### மது அருந்தாவிட்டாலும் கல்லீரல் ஏன் சேதமடைகிறது..? அறிகுறிகள்.? எப்படி தவிர்ப்பது..?



பொதுவாக, மது அருந்துவது கல்லீரலை சேதப்படுத்தும் என்று கூறப்படுகிறது.. இந்த விஷயத்தில் ஒருவர் கவனமாக இருக்க வேண்டும்.. ஆனால், இப்போதெல்லாம், மது அருந்தாதவர்களிடமும் கல்லீரல் பிரச்சினைகள் வேகமாக அதிகரித்து வருவதாக ஆய்வுகள் காட்டுகின்றன.. அவர்கள் மது அருந்தாவிட்டாலும் கூட.. கல்லீரல் எவ்வாறு சேதமடைகிறது என்று தெரியாததால் பலர் குழப்பமடைகிறார்கள். ஆரம்பத்தில், கல்லீரல் பிரச்சினைகளின் அறிகுறிகள் லேசானவை.. எனவே மக்கள் அவற்றைப் புறக்கணிக்கிறார்கள். பின்னர்.. படிப்படியாக கல்லீரல் சேதமடைகிறது.. அவர்கள் நோய்வாய்ப்படுகிறார்கள்.. இருப்பினும்.. கல்லீரல் சேதமடைந்தவுடன்.. சில அறிகுறிகள் ஆரம்பத்தில் தோன்றும்.. அவற்றைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பது முக்கியம்..

படிப்படியாக, சோர்வு ஏற்படுகிறது, பசி குறைகிறது, வயிறு வலது பக்கத்தில் கனமாக உணர்கிறது. சிலர் வாயு, அஜீரணம், குமட்டல் அல்லது எடை அதிகரிப்பு பற்றியும் புகார் கூறுகின்றனர். கூடுதலாக, தோல் மற்றும் கண்கள் மஞ்சள் நிறமாக மாறுதல், கருமையான சிறுநீர் மற்றும் கால்களில் வீக்கம் போன்ற அறிகுறிகளும் தோன்றக்கூடும். இவை அனைத்தும் கல்லீரல் சரியாக செயல்படவில்லை என்பதைக் குறிக்கும் அறிகுறிகள். எனவே, மது அருந்தாதவர்கள் கூட கல்லீரல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது ஏன் முக்கியம் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

மதுவைத் தவிர கல்லீரலைப் பாதிக்கும் பல காரணிகள் உள்ளன என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.. அதிகமாக வறுத்த உணவு மற்றும் குப்பை உணவு போன்ற மோசமான உணவுப் பழக்கங்கள் கல்லீரலில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. உடல் செயல்பாடு இல்லாதது மற்றும் எடை அதிகரிப்பு ஆகியவை கல்லீரல் பிரச்சினைகளுடன் தொடர்புடையவை. குறிப்பாக மருத்துவரை அணுகாமல் நீண்ட கால மருந்துகளை உட்கொள்வது கல்லீரலுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்..

மேலும், வைரஸ் தொற்றுகள், அசுத்தமான நீர் அல்லது உணவு மூலம் பரவும் நோய்கள் கல்லீரலைப் பாதிக்கலாம். மன அழுத்தம், மோசமான வாழ்க்கை முறை பழக்கவழக்கங்கள் மற்றும் தூக்கமின்மை ஆகியவை உடலின் வளர்சிதை மாற்றத்தை சீர்குலைத்து கல்லீரலைப் பாதிக்கலாம். சில சந்தர்ப்பங்களில், குடும்ப வரலாறு அல்லது ஏற்கனவே உள்ள உடல்நலப் பிரச்சினைகளும் கல்லீரல் ஆரோக்கியத்தை பாதிக்கலாம்.

**யாருக்கு அதிக ஆபத்து உள்ளது?**

சிலர் கல்லீரல் பாதிப்புக்கு அதிக ஆபத்தில் உள்ளனர். உடல் பருமன் உள்ளவர்கள், நீரிழிவு நோய் உள்ளவர்கள் அல்லது தைராய்டு பிரச்சினைகள் உள்ளவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர். உடல் ரீதியாக குறைவாக செயல்படுபவர்கள் அல்லது அடிக்கடி வெளியே சாப்பிடுபவர்களும் அதிக ஆபத்தில் உள்ளனர்.

நீண்ட காலமாக மருந்துகளை உட்கொள்பவர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கும் கல்லீரல் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும், கல்லீரல் நோயின் குடும்ப வரலாற்றைக் கொண்டவர்களும் கவனமாக இருக்க வேண்டும்.

**எப்படித் தவிர்ப்பது?**

ஆரோக்கியமான கல்லீரலைப் பராமரிக்க சீரான, வீட்டில் சமைத்த உணவு அவசியம். வறுத்த, பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவும். ஒவ்வொரு நாளும் லேசான உடற்பயிற்சி அல்லது நடைப்பயிற்சியைச் சேர்க்கவும். நிறைய தண்ணீர் குடிக்கவும், சரியான நேரத்தில் சாப்பிடவும்.. உணவு ஒரு நல்ல வாழ்க்கை முறை கல்லீரல் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.. மருந்துச் சீட்டு இல்லாமல் மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்கவும். உங்கள் எடையைக் கட்டுக்குள் வைத்திருங்கள். வழக்கமான சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்ளுங்கள். மன அழுத்தத்தைக் குறைக்க யோகா மற்றும் தியானம் செய்யுங்கள். சிறிய பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பது நீண்ட காலத்திற்கு கல்லீரல் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.

## ‘மஞ்சும்மல் பாய்ஸ்’ டைரக்டர் மீது இளம்பெண் பாலியல் புகார்!

சென்னை, மார்ச். 02–

கேரளா மட்டுமின்றி தமிழகத்திலும் கடந்த 2022–ம் ஆண்டு பரபரப்பை ஏற்படுத்திய சினிமா ‘மஞ்சும்மல் பாய்ஸ்’. இந்த படத்தை இயக்கியவர் சிதம்பரம். படத்தின் வெற்றியின் மூலம் பிரபலமான இவர் மீது இளம்பெண் பாலியல் புகார் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

கேரள மாநிலம் கொச்சி அருகே உள்ள எலம்குளம் பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இளம்பெண் ஒருவர் எர்ணாகுளம் தெற்கு போலீசில் இது தொடர்பாக புகார் அளித்துள்ளார். டைரக்டர் சிதம்பரம், தனது பிளாட்டில் புகுந்து பாலியல் நோக்கத்துடன் தவறாக நடந்து கொண்டதாக புகாரில் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் அடிப்படையில் டைரக்டர் சிதம்பரம் மீது பாலியல் வன்கொடுமை வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஐ.பி.சி. பிரிவு 74 மற்றும் 75–ன் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருவதாகவும், விரைவில் டைரக்டர் சிதம்பரத்திடம் விசாரணை நடத்தப்படும் என்றும் எர்ணாகுளம் தெற்கு போலீசார் தெரிவித்தனர். தேவைப்பட்டால் கைது உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

## தீக்குளித்த பூர்ணசந்திரன் குடும்பத்திற்கு பிரதமர் ஆறுதல்!

மதுரை, மார்ச் 02–

* திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என வலியுறுத்தி, மதுரையை சேர்ந்த பூர்ணசந்திரன் சமீபத்தில் தீக்குளித்து இறந்தார்.

நேற்று மதுரை வந்த பிரதமர் மோடி, மண்டேலா நகரில் கூட்டம் தொடங்கும் முன், பூர்ணசந்திரனின் தாய் காளீஸ்வரி, மனைவி இந்துமதி, மகன்கள் சிவனேஷ், இனியன் ஆகியோருக்கு ஆறுதல் கூறினார். பின் னர் பொதுக்கூட்ட மேடை யில் பேசும் போது, அவர்களுக்கு ஆறுதல் கூறியதை தெரிவித்தார்.

* பொதுக்கூட்ட மேடைக்கு மாலை, 5:00 மணிக்கு பிரதமர் வந்தார். 5:42க்கு பேச ஆரம்பித்த பிரதமர், 6:25க்கு முடித்தார். கடந்த முறை ஹிந்தியில்



பேசிய பிரதமர், இம்முறை ஆங்கிலத்தில் பேசினார்.

* பிரதமருக்கு, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி ஏலக்காய் மாலை அணிவித்தார்.

பின், திருப்பரங்குன்றம் முருகன் படத்தை நினைவு பரிசாக வழங்கினார்.

* மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை, மத்திய அரசு கிடப்பில் போட்டதை கண்டித்தும், பிரதமர் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பெரியார் பஸ் ஸ்டாண்ட் பகுதியில், தமிழ் புலிகள் கட்சி தலைவர் நாகை திருவள்ளுவன் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

* பிரதமர் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து சிந்தாமணி ரிங் ரோடு பகுதியில், மதுரை நகர் காங்., தலைவர் நல்லமணி தலைமையில் காங்கிரசார் பொதுக்கூட்டம் நடக்கும் பகுதிக்கு செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

## உயர்நீதிமன்ற கிளை நீதிபதிகள் மாற்றம்!



சென்னை, மார்ச். 02–

* என்.சதீஷ்குமார், ஆர். பூர்ணிமா அமர்வு– பொதுநல மனுக்கள், ரிட் மற்றும் ரிட் மேல்முறையீடு 2025 லிருந்து.

* ஜி.ஆர்.சுவாமிநாதன், எம்.ஜோதிராமன் அமர்வு– முதலாவது மேல்முறையீடு, 2024 வரையிலான ரிட் மற்றும் ரிட் மேல்முறையீடு, நடுவர்மன்ற உத்தரவு மேல்முறையீடு.

* என்.ஆனந்த் வெங்கடேஷ், பி.தனபால் அமர்வு– ஆட்கொணர்வு மனு, கிரிமினல் மேல்முறையீடு.

* பி.புகழேந்தி– சி.பி.ஐ.,லஞ்ச ஒழிப்புத்துறை, பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான கிரிமினல் மேல்முறையீடு.

* ஹேமந்த் சந்தன்கவுடர்– தொழிலாளர் ரிட் மனுக்கள், தொழிலாளர் நீதிமன்றம், கூட்டுறவு தீர்ப்பாய உத்தரவுகளுக்கு எதிரான ரிட் மனுக்கள்.

* கே.முரளிசங்கர்– சிவில் பல்வகை மேல்முறையீடு, சிவில் பல்வகை இரண்டாம் மேல்முறையீடு, 2013 மற்றும் 2014க்குரிய இரண்டாவது மேல்முறையீடு.

* எஸ்.ஸ்ரீமதி– நில சீர்திருத்தம், நில குத்தகை, நகர்ப்புற நில உச்சவரம்பு, நிலம் கையகப் படுத்துதல், பட்டா, ஆர்.டி.ஐ.,சுதந்திரப் போராட்ட தியாகிகள் ஓய்வூதியம் ரிட் மனுக்கள், 2022 வரையிலான பணியாளர்கள் ரிட் மனுக்கள்.

* டி.பரதசக்கரவர்த்தி– மோட்டார் வாகனம் மற்றும் அதற்கான வரிகள், ஏற்றுமதி, இறக்குமதி வரிகள், சுங்கம் மற்றும் மத்திய கலால்துறை, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை, வனம், தொழிற்சாலைகள், அறநிலையத்துறை, வக்புவாரிய ரிட் மனுக்கள், ரிட் பல்வகை மனுக்கள், கனிமவளம், பதிவுத்துறை ரிட் மனுக்கள்.

ஆர்.விஜயகுமார்– வழக்கு பதிவு செய்ய உத்தரவிடுதல், வழக்கை ரத்து செய்தல், வேறு விசாரணை அமைப்பிற்கு வழக்கை மாற்றுதல் தொடர்பான மனுக்கள் 2024 முதல்.

* எம்.சுதீர் குமார்– பணியாளர்கள் தொடர்புடைய ரிட் மனுக்கள் 2023 லிருந்து.

* எல்.விக்டோரியா கவுரி– கிரிமினல் சீராய்வு, ரிட்( சி.ஆர்.பி.சி.,) அனைத்து ஆண்டுகளுக்குரியவை

* பி.பி.பாலாஜி– இரண்டாவது மேல்முறையீடு–2017 லிருந்து.

* கே.கே.ராமகிருஷ்ணன்– ஜாமின், முன்ஜாமின் மனுக்கள், 2023 வரையிலான வழக்கு பதிவு செய்ய உத்தரவிடுதல், வழக்கை ரத்து செய்தல், வேறு விசாரணை அமைப்பிற்கு வழக்கை மாற்றுதல் தொடர்பான மனுக்கள்.

* வி.லட்சுமிநாராயணன்– சிவில் சீராய்வு பி.டி., மற்றும் என்.பி.டி.,– அனைத்து ஆண்டு களுக்குரியவை, நடுவர்மன்ற மேல்முறையீடு, கம்பெனி மேல்முறையீடு, 2015 மற்றும் 2016க்குரிய இரண்டாம் மேல்முறையீடு.

* பி.வடமலை– முதலாவது மேல்முறையீடு–அனைத்து ஆண்டுகளுக்குரியவை, 2012 வரையிலான இரண்டாவது மேல்முறையீடு.

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் 3 மாதங்களுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் நீதிபதிகளுக்கு வழக்குகள் விசாரணை மாற்றியமைக்கப்படுகிறது. மேற்கண்டவாறு மதுரைக் கிளையில் நாளை (மார்ச் 2) முதல் அடுத்த 3 மாதங்களுக்கு நீதிபதிகள் விசாரணை மேற்கொள்வர்.

## ஈரான் தாக்குதல் எதிரொலி; யுஏஇயின் பங்குச்சந்தைகள் மூடல்!

துபாய், மார்ச். 02–

ஈரான் நடத்தி வரும் தாக்குதல் காரணமாக, ஐக்கிய அரபு அமீரகத்தின் இரு பங்குச்சந்தைகள் இரு தினங்களுக்கு மூடப்படுவதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.இஸ்ரேலுடன் இணைந்து அமெரிக்கா, ஈரான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் ஐக்கிய அரபு அமீரகம், குவைத், கத்தார், பஹ்ரைன் உள்ளிட்ட வளைகுடா நாடுகள் மீது தாக்குதலில் இறங்கி இருக்கிறது.

போர் எதிரொலியாக பிராந்தியம் முழுவதும் அமைதியற்ற சூழல் நிலவி வருகிறது. இதனால், துபாயில் உள்ள உலகளாவிய பன்முக கலாசார பொழுதுபோக்கு மையத்தை தற்காலிகமாக மூடுவதாக ஐக்கிய அரபு அமீரகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதேபோல, அனைத்து சுற்றுலா தலங்கள், உணவகங்கள், ரிசார்ட்டுகள் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மூடப்படுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது. இந்த நிலையில்,




ஐக்கிய அரபு அமீரகத்தின் இரண்டு முக்கிய பங்குச் சந்தைகளான அபுதாபி செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் மற்றும் துபாய் நிதிச் சந்தை ஆகியவற்றின் வர்த்தகம், இன்றும், நாளையும் நிறுத்தி வைக்கப்படுவதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஈரான் தாக்குதலில் யுஏஇயில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஈரானை தாக்க அமெரிக்கா பயன்படுத்திய ஆயுதங்கள் என்னென்ன தெரியுமா?

வாஷிங்டன், மார்ச். 02–

ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க படையினர் பயன்படுத்திய அதிநவீன ஆயுதங்கள் குறித்த விபரம் தற்போது வெளியாகியுள்ளது.

அணுஆயுத ஒப்பந்தத்திற்கு பிடி கொடுக்காத ஈரானுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கில், கடந்த பிப்ரவரி 28ம் தேதி அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதில், ஈரானின் ஆட்சியாளர் கமேனி உள்பட 48 முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர். ஈரான் முழுவதும் உள்ள அரசு மற்றும் ராணுவத் தளங்கள் அழிக்கப்பட்டதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, யாரும் நம்ப முடியாத வெற்றியை அடைந்து விட்டதாகக் கூறிய அமெரிக்க அதிபர் டிரம்ப், ஈரான் ராணுவம், புரட்சிகர காவல்படையினர் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க படையினர் பயன்படுத்திய அதிநவீன ஆயுதங்கள் குறித்த விபரத்தை அமெரிக்காவின் சென்ட்காம்



வெளியிட்டுள்ளது.

அதன் விபரம்;

* பி–2 ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானங்கள்
* லூகாஸ் டிரோன்கள் (ஆளில்லா விமானங்கள்)
* பேட்ரியாட் ஏவுகணை தடுப்பு அமைப்புகள்
* தாட் (THAAD) அதீத உயர ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள்
* எப்–18,எப்–16, எப்–22 ரக போர் விமானங்கள்
* ஏ–10 தரைவழித் தாக்குதல் விமானங்கள்
* எப்–35 ஸ்டெல்த் போர் விமானங்கள் ( ஸ்டெல்த் விமானம் என்பது ரேடார் கண்களுக்கு புலப்படாது)
* ரேடாரை முடக்கும் இஏ–18ஜி எலக்ட்ரானிக் தாக்குதல் விமானங்கள்
* வான்வழி முன்கூட்டியே எச்சரிக்கும் மற்றும் கட்டுப்பாட்டு விமானங்கள்
* பி–8 கடல்சார் ரோந்து விமானங்கள்
* ஆர்சி–135 உளவு பார்க்கும் விமானங்கள்
* எம்க்யூ–9 ரீப்பர்ஸ் ஆயுதம் ஏந்திய டிரோன்கள்
* எம்–142 அதி நவீன பீரங்கி ஏவுகணை அமைப்புகள்
* அணுசக்தியால் இயங்கும் பிரம்மாண்ட விமானம் தாங்கி கப்பல்கள்
* ஏவுகணை அழிப்பு கப்பல்கள்
* டிரோன்களை இடைமறித்து அழிக்கும் அமைப்பு
* வான்வழியே எரிபொருள் நிரப்பும் விமானங்கள்
* சி–17 மற்றும் சி–130 ராணுவ சரக்கு விமானங்கள்



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு
### சென்னையில் துறைமுக வேலைகள் அறிவிப்பு!




நிறுவனத்தின் பெயர்: காமராஜர் போர்ட் லிமிடெட்
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 14 ஜூனியர் உதவியாளர், ஜூனியர் கணக்காளர் பதவிகள்
வேலையிடும் இடம்: சென்னை
தொடக்க தேதி: 27.02.2026
கடைசி தேதி: 28.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://kamarajarport.in/

## யுஏஇ, சவுதி, இஸ்ரேல், கத்தார் நாடுகளுக்கான விமான சேவை ரத்து; ஏர் இந்தியா!




புதுடில்லி, மார்ச். 02–

மத்திய கிழக்கில் தொடரும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் கத்தார் செல்லும் மற்றும் புறப்படும் விமான சேவை இன்றும் (மார்ச் 02) ரத்து செய்யப்படுவதாக ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசிய நாடான ஈரான் மீது அந்த பிராந்தியத்தில் உள்ள இஸ்ரேல், அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானும் பதிலடி கொடுப்பதால், மேற்காசியா முழுதும் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் இன்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இன்று செல்ல இருந்த அமிர்தசரஸ்– பர்மிங்காம் (AI117), டில்லி– சூரிச் (AI151), டில்லி– கோபன்ஹேகன் (AI157), பர்மிங்காம் – டில்லி (AI114) விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கான அனைத்து மற்ற விமானங்களும் மாற்று வழித்தடங்களைப் பயன்படுத்தி அட்டவணைப்படி இயக்கப்படும்.

ஏர் இந்தியா விமான நிறுவனம் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்துவருகிறது.பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துவதாகவும் மாற்று ஏற்பாடு செய்ய உறுதி பூண்டுள்ளதாகவும் ஏர் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## காணவில்லை

எமது கட்சிக்காரர் பழனி வட்டம், ஆண்டிபட்டி கிராமம், 3வது வார்டில் வசிக்கும் திரு.குருசாமிகவுண்டர் செங்காளியப்பன் எமக்கு கொடுத்துள்ள தகவலின் கொடுக்கப்படும் அறிவிப்பு,

எமது கட்சிக்காரர் 12.01.2026 அன்று பழனி தாலுகா, நெய்க்காரபட்டியில் உள்ள ஸ்ரீ அம்மன் ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுக்க சென்றபோது கீழ்கண்ட அசல் ஆவணம் தொலைந்து போய் விட்டது. பின்னர் அதனை பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. எமது கட்சிக்காரர் இது சம்மந்தமாக 24.02.2026 தேதியில் பழனி தாலுகா காவல் நிலையத்தில் இணையதளம் வழியாக புகார் கொடுத்துள்ளார். அந்த புகார் மனு எண். CUS26079799 ஆகப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் எவருக்கேனும் கிடைக்கும் பட்சத்தில் அதை எமது வசமோ அல்லது எமது கட்சிக்காரர் வசமோ ஒப்படைக்கும்படி இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி அசல் ஆவணத்தை எமது கட்சிக்காரருக்கு எதிராக பயன்படுத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அது எமது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்று இதன் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.

ஆவண விபரம்

எமது கட்சிக்காரர் மற்றும் அவரது சகோதரர்கள் அவர்கள் பெயரில் உள்ள பழனி வட்டம், ஆண்டிபட்டி கிராமம், சர்வே 426/1 நிர் ஏக் 10 செ 76 சம்மந்தப்பட்ட நிலம் வகையறாவின் பாகப்பிரிவினை பத்திரம். பழனி எண்.2 இணை சார்பதிவகத்தில் 07.10.1994 தேதியில் 1542/1994 எண்ணாக பதிவாகியுள்ளது.

**G.பாஸ்கரன், B.Sc., B.L**
வழக்கறிஞர் & நோட்டரி
கவுண்டர்காம்ப்ளக்ஸ், (J.P. ஜெராக்ஸ்)
தலைமை தபால் நிலைய ரோடு,
பழனி (செல்.94433 24350).



மதுரை மணி
உள்ளூர் 02.03.26 வெளியூர் 03.03.26

# ஈரான் - இஸ்ரேல் போர்: நாடு முழுவதும் போராட்டங்களை கண்காணிக்க உள்துறை அமைச்சகம் உத்தரவு!



புதுடெல்லி, மார்ச். 02– ஈரான் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டதை தொடர்ந்து மத்திய கிழக்கு பகுதியில் நெருக்கடி நிலை அதிகரித்து வருகிறது. இதற்கு கண்டனம் தெரிவித்து இந்தியாவில் ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, தமிழகத்தில் உள்ளிட்ட மாநிலங்களில் ஷியா முஸ்லிம் ஜமாஅத் சார்பில் அமெரிக்க தூதரகம் முற்றுகை பேரணி போராட்டம் நடைபெற்றது.

இந்தநிலையில், ஈரான் போர் – இந்தியாவில் வன்முறை வெடிக்க வாய்ப்பு உள்ளதாகவும், ஈரானுக்கு ஆதரவான போராட்டங்களை கண்காணிக்க உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், டிஜிபி களுக்கு உள்துறை அமைச்சகம் கடிதம் எழுதி உள்ளது.

முன்னதாக இது குறித்து விவாதிக்க. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு மந்திரி சபை கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது.

பிரதமர் மோடி மதுரை பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு டெல்லி சென்ற பின்னர் இரவு மணி அளவில் இந்த கூட்டம் தொடங்கியது.

கூட்டத்தில் பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங், உள்துறை மந்திரி அமித்ஷா, நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பாதுகாப்பு. எரிசக்தி மற்றும் வளைகுடா நாடுகள், அமீரகத்தில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

# கேட்டது.. 12, கொடுப்பது.. 4: திமுக கூட்டணியில் மதிமுக அதிருப்தி!



சென்னை, மார்ச். 02– தமிழகத்தில் கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில், இதே திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த மதிமுக, 6 தொகுதிகளில் போட்டியிட்டது. தேர்தலில் தங்களுடைய பம்பரம் சின்னத்தில் போட்டியிட விருப்பம் தெரிவித்தும், திமுக வற்புறுத்தியதால், அக்கட்சியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தி லேயே போட்டியிட்டது. , அரியலூர் (சின்னப்பா), மதுரை தெற்கு (பூமிநாதன்), வாசுதேவநல்லூர் (சதன் திருமலைக்குமார்), சாத்தூர் (ரகுராமன்) ஆகிய 4 தொகுதிகளில் மதிமுக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

தொடர்ந்து, நடைபெற்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் மதிமுகவுக்கு திருச்சி தொகுதி ஒதுக்கப்பட்டது. அதில், போட்டியிட்ட மதிமுக பொதுச்செயலாளர் வைகோவின் மகன் துரை வைகோ, "செத்தாலும் மதிமுகவின் சின்னமான பம்பரத்தில் தான் போட்டியிடுவேன்" என்று வேட்பாளர் அறிமுக கூட்டத்திலேயே அமைச்சர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்க கூறினார்.

ஆனால், தேர்தலில் அவருக்கு பம்பரம் சின்னம் கிடைக்கவில்லை, தீப்பெட்டி சின்னத்தைதான் தேர்தல் ஆணையம் ஒதுக்கியது. அந்த சின்னத்திலேயே போட்டியிட்டு துரை வைகோ வெற்றி பெற்றார்.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் திமுக கூட்டணியில் மதிமுக தொடரும் நிலையில், இந்த முறை 12 தொகுதிகள், ஒரு ராஜ்ய சபா சீட் வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. மேலும், பம்பரம் சின்னத்தில்தான் போட்டியிடுவோம் என்றும் கூறியது.

ஆனால், திமுக தலைமையோ, தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு வந்த மதிமுக நிர்வாகிகளிடம், ராஜ்ய சபா சீட் தரமுடியாது என்று மறுத்த அதே நேரத்தில், 12 தொகுதிகள் எல்லாம் கொடுக்க முடியாது, திமுகவின் சின்னமான உதயசூரியனில் போட்டியிட்டால் 4 தொகுதிகள், வேறு சின்னத்தில் போட்டியிட முடிவு செய்தால் 3 தொகுதிகள் கறாராக கூறிவிட்டது.

இதனால், அதிர்ச்சியடைந்த வைகோ, கடந்த சனிக்கிழமை முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலினை சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பேசி, தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

என்றாலும், திமுக தலைமை மதிமுகவின் கோரிக்கைக்கு அசைந்து கொடுக்கவில்லை. இதனால், திமுக கூட்டணியில் மதிமுக அதிருப்தியுடனேயே தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

# அதிகாரப் பகிர்வு தேவை... தொகுதி பங்கீட்டில் பேரம் பேசும் கட்சியாக வி.சி.க. இருக்காது - திருமாவளவன்!



சென்னை, மார்ச். 02– சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. – வி.சி.க. இடையே முதற்கட்ட தொகுதி பேச்சுவார்த்தை தொடங்கியது. வி.சி.க. தலைவர் திருமாவளவன் தலைமையிலான குழுவினர் தி.மு.க.வின் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தி.மு.க. உடனான முதற்கட்ட பேச்சுவார்த்தை முடிந்தநிலையில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* எங்களின் விருப்பம் என்ன என்பதை தெரிவித்துள்ளோம். முதல்வரிடம் பேசிய பிறகு தி.மு.க. குழு மீண்டும் அழைக்கும்.
* விடுதலை சிறுத்தைகள் கட்சிகளின் வலிமைக்கேற்ப இடங்கள் வேண்டும் என்று தி.மு.க.விடம் கேட்டிருக்கிறோம்.
* தி.மு.க. கூட்டணியில் இருந்தாலும் பேரம் பேசும் கட்சியாக விசிக இருக்காது. விசிக பேரம் பேசும் கட்சியல்ல.
* முதலமைச்சருடன் பேசிய பின்னர் மீண்டும் அழைப்பு விடுக்கப்படும் எனக் கூறி உள்ளனர்.
* தி.மு.க. கூட்டணியில் புதுச்சேரியில் தொகுதிகள் வேண்டும் என கோரியுள்ளோம்.
* புதுச்சேரியில் தனித்தொகுதியும் வேண்டும், பொதுத்தொகுதியும் வேண்டும்.
* தொகுதிப் பங்கீட்டில் அதிகாரப் பகிர்வு தேவை.
* ஆட்சியில் அதிகாரப் பகிர்வு கேட்கவில்லை. தொகுதி ஒதுக்கீட்டில் தான் கேட்கிறோம்.
* தி.மு.க. கூட்டணியில் தான் காங்கிரஸ் இருக்கும்.
* தமிழகத்தை பொருத்தவரை மோடி வித்தை எடுபடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ராகுல் காந்தியை சகோதரர் என குறிப்பிடாதது ஏன்? - முதல்-அமைச்சருக்கு அண்ணாமலை கேள்வி!



சென்னை, மார்ச். 02– தி.மு.க. தலைவரும், முதல் – அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று தனது 73–வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். அவருக்கு அமைச்சர்கள், திமுக எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

அந்தவகையில், நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்திதி முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்திருந்தார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "தமிழக முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். நீங்கள் நல்ல ஆரோக்கியம், வலிமை மற்றும் நீண்ட ஆயுள் பெற்று தமிழக மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வாழ்த்துகிறேன்" என தெரிவித்திருந்தார்.

இதற்கு, முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலின் "உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி" என தெரிவித்திருந்தார். ஆனால், இதற்கு முன்னர் கடந்த ஆண்டு ராகுல் காந்தி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தபோது அதற்கு, "அன்புள்ள சகோதரரே, தொலைபேசியில் உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கும் அன்பான வார்த்தைகளுக்கும் நன்றி" என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ராகுல் காந்தியை 'சகோதரர்' என்று குறிப்பிட்டிருந்த முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்த முறை 'சகோதரர்' என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை. இது குறித்து அண்ணாமலை தனது எக்ஸ் தள பக்கத்தில் விமர்சனம் ஒன்றை வைத்துள்ளார். அதில் அவர், "போன வருஷம்: புரோ, புரோ!... இந்த வருஷம்: புரோ இல்லை... ஏன் புரோ?" என அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

# 2026 -ம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம்; நீல விளிம்புடன் சிவப்பு சந்திரனை பார்க்க மிஸ் பண்ணிடாதீங்க!



சந்திர கிரகணத்தின் போது, நாளை (மார்ச் 03) வானில் அதிசய நிகழ்வாக நீல விளிம்புடன் சிவப்பு சந்திரனை பார்க்கலாம்.

சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும், ஒரே நேர்கோட்டில் வரும் போது, பூமியின் நிழல் சந்திரன் மீது விழுகிறது. இதுவே சந்திர கிரகணம். இந்தாண்டுக்கான முழு சந்திர கிரகணம் நாளை நிகழ உள்ளது. நிலா சிவப்பு நிறத்தில் ஒளிர்வதுடன், நீல விளிம்புடன் காட்சியளிக்கும் என, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டத் தலைவர் பிரபாகரன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: முழு கிரகணத்தின் போது, சூரிய ஒளி பூமியின் வளிமண்டலத்தை கடந்து வளைந்து செல்கிறது. இதனால் நீல ஒளி சிதறுகிறது. சிவப்பு ஒளி மட்டும் சந்திரனை அடைகிறது. இதனால் சந்திரன் அடர் ஆரஞ்ச் நிறத்தில் தோன்றும். இது 'பிளட் மூன்' எனப்படுகிறது.

சந்திரன், பூமி நிழலின் மையப்பகுதி வழியாக செல்லும். இம்முறை, அது 'அம்பிரா' நிழலின் மேல் விளிம்பை தொட்டு மெதுவாக உரசிச் செல்லும். இதனால், சூரிய ஒளி பூமியின் உயர்ந்த வளிமண்டலத்தில் உள்ள ஓசோன் படலத்தின் வழியாக செல்லும்.

அப்போது, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு நிறங்கள் உறிஞ்சப்படும். அடர் நீல நிறம் மட்டும் நிலவின் விளிம்பில் மெல்லிய கோடாக தோன்றும். சந்திர கிரகணத்தை வெறும் கண்களால் பார்க்கலாம். தெளிவாக காண தொலைநோக்கிகளை பயன்படுத்தலாம். அசாம், அருணாச்சலப்பிரதேசம், மேகாலயாவில் முழுமையாக காண முடியும்.

டில்லி, மும்பை, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் உள்ளிட்ட பகுதிகளில் இறுதிப் பகுதி மட்டும் தெரியும். இந்திய நேரப்படி, மாலை 3.20 முதல், மாலை 6.47 மணி வரை சந்திர கிரகணம் இருக்கும். இவ்வாறு, அவர் கூறினார். 2026ம் ஆண்டிற்கான முதல் சூரிய கிரகணம் பிப்ரவரி 17ம் தேதி நிகழ்ந்தது. இது பகுதி நேர சூரிய கிரகணம் என்று அழைக்கப்பட்டது. தற்போது நாளை நீல விளிம்புடன் சிவப்பு சந்திரனை பார்க்கலாம். இதனை யாரும் மிஸ் பண்ணிடாதீங்க!

# இந்தியாவில் பெட்ரோல் - டீசல் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதா? அதிகாரிகள் விளக்கம்!




புதுடெல்லி, மார்ச். 02– ஈரானின் அணு ஆயுத திட்டங்களை கடுமையாக எதிர்த்து வரும் அமெரிக்கா, இது தொடர்பாக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அந்த நாட்டை வற்புறுத்தியது.ஆனால் இந்த பேச்சுவார்த்தையில் தீர்வு ஏற்படாத நிலையில், நேற்று முன்தினம் இஸ்ரேலுடன் இணைந்து ஈரான் மீது திடீரென போர் தொடுத் தது அமெரிக்கா. ஏவுகணைகள், டிரோன்கள் மூலம் இரு நாட்டு படைகளும் கூட்டாக நடத் திய தாக்குதலில் ஈரான் தலைநகர் டெஹ்ரான் உள்பட நாடு முழுவதும் முக்கிய நகரங்கள் பெருத்த சேதத்தை சந்தித்தன. போர் விமானங்கள் குண்டு வீசியதில் டெஹ்ரான் குலுங்கியது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதல்களில் முதல் நாளிலேயே ஈரானின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி (வயது 86) கொல்லப்பட்டார்.

இது ஈரான் மட்டுமின்றி உலக நாடுகளுக் கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. மேலும் ஈரான் ராணுவ மந்திரி அசிஸ் நாசிர்சாடே, ராணுவ தளபதி அப் துல் ரகிம் மவுசவி, புரட்சிகர காவல்படை தளபதி முகமது பக்பூர், ராணுவ ஆலோசகர் அலி சம்கானி ஆகியோரும் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் ராணுவ கவுன்சில் ஆலோசனை கூட்டத்தில் பங் கேற்றிருந்தபோது, அந்த இடத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பலியாகினர்.

அயதுல்லா அலி காமேனி மரணத்தால் அதிர்ச்சியில் உறைந்துள்ள ஈரான் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப் படும் என சபதம் செய்துள்ளது. இதற்கிடையே, இஸ்ரேல்– அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடியாகவும், ஈரான் தலைமை மதகுரு கமேனி கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையிலும், உலகில் கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு அதிகம் பயன்படுத்தப்படும் கடல் பகுதிகளில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் நேற்று முன் தினம் மூடியுள்ளது.

இந்தியா தனக்குத் தேவையான 88 சதவீத கச்சா எண்ணெய், 60 சதவீத இயற்கை எரிவாயுவை சவூதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் இந்த நீரிணை வழியாகவே இறக்குமதி செய்து வருகிறது. இந்த நீரிணையை ஈரான் மூடிவிட்ட போதிலும், இந்தியாவில் தற்போதைக்கு பெட்ரோல்–டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். ஏனெனில் இந்தியாவிடம் ஏற்கெனேவே 10 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல் , டீசல், எரிவாயு இருப்பு உள்ளது. இதேபோல் அவசர காலத்துக்கு பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்கப்பட்டுள்ள பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவை மேலும் 5 முதல் 7 நாள்கள் வரை பயன்படுத்த முடியும்..இதேபோல், ஹோர்முஸ் நீரிணை ஈரானால் மூடப்பட்டிருப்பது அதிக காலம் நீடிக்காது எனக் கூறப்படுகிறது. அப்படி நீடிக்கும்பட்சத்தில், வளைகுடா நாடுகளுக்கு மாற்றாக ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா மீண்டும் இறக்குமதி செய்யும் எனவும் அதிகாரிகள் வட்டரத்தில் தெரிவிக்கப்பட்டது.

# எடப்பாடி பழனிசாமியின் டெல்லி பயணத்தின் பின்னணி என்ன...?



சென்னை, மார்ச். 02– தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில், பிரதான எதிர்க்கட்சியான அதிமுக தலைமையிலான கூட்டணியில், பாஜக, பாமக, தமாகா, அமமுக, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் உள்பட மேலும் சில கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

ஆளுங்கட்சியான திமுக கூட்டணியில், 19 கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை தொடங்கி, 2 கட்சிகளுக்கு தொகுதிகள் எத்தனை? என்பதும் முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது.

ஆனால், அதிமுக கூட்டணியில் இன்னும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்படவே இல்லை. அதற்கான குழுவையும் அதிமுக தலைமை இன்னும் அமைக்கவில்லை. இதனால், கூட்டணி கட்சி தலைவர்கள், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது அதிருப்தியில் உள்ளனர்.

அதிமுக கூட்டணியில், கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக, இந்த முறை 35 தொகுதிகள் கேட்டு வருகிறது. இதேபோல், பாமக 18, அமமுக 10, தமாகா 6 தொகுதிகளை கேட்கிறது. மேலும், இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் ஆகிய கட்சிகள் தலா 2 தொகுதிகளையும், 4 சிறிய கட்சிகள் தலா 1 தொகுதியையும் கேட்டுவரு கின்றன.

கடந்த (2021) சட்டசபை தேர்தலில் அதிமுக 179 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால், இந்த முறை கூட்டணி கட்சிகள் கேட்பதை கொடுத்தால், 81 தொகுதிகளை விட்டு கொடுக்க வேண்டியது உள்ளது. இதை வைத்து பார்த்தால், இந்த முறை அதிமுகவுக்கு 153 தொகுதிகளே கிடைக்கும் என்ற நிலை உள்ளது.

சாதகமான சூழ்நிலை இல்லை

இதுபோன்ற நிலை ஏற்பட்டால், அதிமுக நிர்வாகிகளை சமாளிக்க முடியாது என்று எடப்பாடி பழனிசாமி நினைக்கிறார். தொகுதி பங்கீட்டுக்கான சாதகமான சூழ்நிலை நிலவாததால், அதற்கான குழுவை அமைக்காமல் எடப்பாடி பழனிசாமி காலம் தாழ்த்தி வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், மதுரையில் நேற்று தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், பிரதமர் நரேந்திரமோடியுடன் கூட்டணி கட்சி தலைவர்களும் பங்கேற்று பேசினார்கள்.

மேலும், மதுரை ரிங் ரோட்டில் உள்ள தனியார் ஓட்டலில் மத்திய மந்திரி பியூஸ் கோயல் முன்னிலையில் கூட்டணி கட்சி தலைவர்களுடன் எடப்பாடி பழனிசாமி தொகுதி பங்கீடு தொடர்பாக பேசினார். ஆனால், இந்த பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று தெரிகிறது.

இந்த நிலையில்தான், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று திடீரென டெல்லி பயணம் மேற்கொண்டு இருக்கிறார். அங்கு, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து அவர் பேசுவார் என தெரிகிறது.

ஏற்கனவே, கடந்த ஜனவரி 4–ந் தேதி மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா திருச்சி வந்தபோது, அவரை சந்தித்து பேசுவதை எடப்பாடி பழனிசாமி தவிர்த்தார். ஆனால், அவர் டெல்லி திரும்பிய பிறகு, அங்கு சென்று அவரை சந்தித்து பேசினார்.

அதுபோல், இந்த முறையும் பிரதமர் நரேந்திரமோடி வந்து சென்றிருக்கும் நிலையில், எடப்பாடி பழனிசாமி அவசர அவசரமாக டெல்லி செல்வது, அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்த சந்திப்பின்போது, தொகுதி பங்கீடு குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

# 7 லட்சம் பிஎப் கணக்கில் உள்ள பணம் தானாகவே வரவு வைக்க முடிவு!




புதுடெல்லி, மார்ச். 02– குறைந்த அளவு இருப்பு கொண்ட 7 லட்சம் இபிஎப்ஓ கணக்குகளில் உள்ள தொகையை, எவ்வித விண்ணப்பமும் இன்றி நேரடியாக சந்தாதாரரின் வங்கி கணக்கிற்கு தானாகவே திருப்பி அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இபிஎப்ஓ எனப்படும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கில் பல ஆண்டுகளாக உரிமை கோரப்படாமல் இருக்கும் சிறு தொகையை திரும்ப வழங்கும் முக்கிய நடவடிக்கையை மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, 7 லட்சத்திற்கு அதிகமான செயல் இழந்த கணக்குகளில் உள்ள நிதி, எவ்வித விண்ணப்பமும் இன்றி நேரடியாக சந்தாதாரரின் வங்கி கணக்கிற்கு செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக இருப்பு வைத்துக் கொண்டு நீண்ட காலமாக செயல்பாடு இல்லாத 7.16 லட்சம் கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த கணக்குகளில் உள்ள தொகையை சம்பந்தப்பட்ட ஆதார் கணக்குடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கில் தானாகவே வரவு வைக்கும் பணியை தொடங்கியுள்ளது.

இந்த நடைமுறைக்காக சந்தாரார்கள் எந்த ஒரு படிவத்தையும் சமர்பிக்க வேண்டியது இல்லை. அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டியது இல்லை. சாந்தாரார்கள் உயிரிழந்து இருந்தால் அவர்களின் வாரிசுகள் அல்லது நாமினிகளுக்கு இந்த தொகை வரவு வைக்கப்பட்டது. பொதுவாக ஒரு பிஎப் கணக்கிற்கு 36 மாதங்கள் பங்களிப்பு வரவில்லை என்றால், அது செயல் இழந்த கணக்கு என்று கருதப்படும்.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020